செய்தி வெளியீடு எண் : 075 நாள் : 11.01.2024

செய்தி வெளியீடு

# அயலகத் தமிழர் தின விழாவில் பங்கேற்கத் தமிழ்நாட்டுக்கு வருகை தந்த சிங்கப்பூர் நாட்டின் மாண்புமிகு சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் திரு. கே.சண்முகம் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் '**தமிழ் வெல்லும்**' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு இரண்டு நாட்கள் நடைபெறும் "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவை இன்று (11.1.2024) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அயலகத் தமிழர் தின விழாவின் இரண்டாவது நாளான நாளை (12.1.2024) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர்களுக்கான விருதுகளை வழங்கி, '**எனது கிராமம்**' என்ற முன்னோடித் திட்டத்தை தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றவுள்ளார்.

இவ்விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொள்ள வருகை தந்துள்ள சிங்கப்பூர் நாட்டின் மாண்புமிகு சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் திரு. கே. சண்முகம் அவர்கள் இன்று (11.1.2024) முகாம் அலுவலகத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசினார்.

**இச்சந்திப்பு தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு**

சென்ற ஆண்டு சிங்கப்பூர் பயணத்தின்போது நான் விடுத்த அழைப்பை ஏற்று, அயலகத் தமிழர் தின விழாவில் பங்கேற்கத் தமிழ்நாட்டுக்கு வந்துள்ள சிங்கப்பூர் நாட்டின் மாண்புமிகு சட்டம் மற்றும் உள்துறை அமைச்சர் திரு. கே. சண்முகம் அவர்களை எனது இல்லத்தில் வரவேற்று மகிழ்ந்தேன்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024–இன் வெற்றியைத் தொடர்ந்து நடைபெற்றுள்ள எங்களின் இந்தச் சந்திப்பு கல்வி – பண்பாடு – தொழில் எனப் பல்வேறு தளங்களில் வளர்ந்து, நாட்டுக்கும், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் பயனளிக்கும் என நம்புகிறேன்.

.............

It was my utmost pleasure to welcome the Hon'ble Minister of Law and Home Affairs of Singapore Thiru. K Shanmugam to my residence in Tamil Nadu. His visit comes as a gracious acceptance of my invitation extended during my last trip to Singapore, as he is on his visit to Tamil Nadu to participate in World Tamil Diaspora Day celebrations.

This meeting, following the successful conduct of TNGIM 2024, holds great promise for fostering collaboration across diverse sectors, including education, culture, and industry. I am optimistic that our discussions will yield fruitful outcomes, contributing substantially to the progress and development of India and Tamil Nadu.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in